Address at Jaffna University

23 January 2012

**யாழ்ப்பாணம்**

# புயலைத் தாண்டினால் தென்றல்

உறக்கத்தில் வருவதல்ல கனவு
உன்னை உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு

அன்பு மாணவச்செல்வங்களே, பெருமை மிக்க ஆசிரியர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்கள். சிறப்பு மிக்க யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் படிக்கும் மாணவர்களாகிய உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாடுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. விவசாயம், அறிவியல், கலை, வியாபாரம், மேலாண்மை, மருத்துவம், வர்த்தகம், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பல்வேறு இளநிலை, மற்றும் மேல்நிலைக்கல்வியும், ஆராயச்சியிலும் சிறந்து விளங்கும் உங்களை எல்லாம் சந்தித்து உரையாடுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

இன்று காலையில் யாழ்பாணத்தில் வந்து இறங்கியவுடன் முதல் எண்ணம் எனக்கு தோன்றியது என்னவென்றால், நான் 5ஆம் வகுப்பு படிக்கும் போது, இராமேஸ்வரத்தில் எனக்கு ஒரு அருமையான கணித ஆசிரியர் இடம் கிடைத்த அனுபவத்தை பற்றி இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவர் பெயர் திரு கனக சுந்தரனார். அவரைப்பற்றி யாழ்பாணத்தை சேர்ந்த மறவன்புலவு க. சத்திதானந்தன் அவர்கள் மூலமாக சமீபத்தில் அவரை தில்லி தமிழ் சங்கத்தில் சந்தித்த போது அவரைப்பற்றி விசாரித்தேன். அவர் யாழ்பாணத்தில் பிறந்து, படித்து, வளர்ந்தவர். அவரை இராமேஸ்வரத்தில் நான் சந்தித்தபொழுது, அவர் ஓய்வு பெற்ற கணித ஆசிரியராக இருந்தார். அதுமட்டுமல்ல, அவர் ஒரு துறவியாகவும் இருந்தார். அதுமட்டுமல்ல, எல்லோராலும் போற்றப்பட்டவர் அவர். அதாவது தினமும் அதிகாலை 5 மணிக்கு, நூற்றுக்கணக்கான மாணவர்கள் மத்தியில் 5 மாணவர்களை

தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இலவசமாக கணிதம் பயிற்றுவிப்பார். கணிதம் பயிற்றுவிப்பதை அவர் ஒரு தொண்டாக கருதினார். அவரிடம் கணிதம் பயின்றால், மாணவர்கள் கணிதத்தில் நல்ல தேர்ச்சி அடைவார்கள்.

அப்படிப்பட்ட கணித துறவியிடம் எனக்கு கணிதம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. நான் அவரிடம் கணிதம் மட்டும் பயிலவில்லை, அவருடைய அற்புதமான வாழ்க்கை நெறியையும், காலை 5 மணிக்கு எழுந்து பணிசெய்தால் அந்த கல்வி நம் மனதில் நீடித்து நிலைக்கும் என்ற நல்ல வழிமுறையையும் கற்றுக்கொண்டேன். யாழ்பாணம் என்னுடைய ஆசிரியர் பிறந்த இடமாக இருப்பதால், அந்த யாழ்பாணத்தை வணங்குகிறேன், யாழ்பாணத்தில் இருக்கும் மக்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்பு நண்பர்களே, வாழ்க்கையில் வெற்றியடைய உங்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள விரும்பும் தலைப்பு **“புயலைத் தாண்டினால் தென்றல்”**

**நான் பறந்து கொண்டேயிருப்பேன்**

அன்பு மாணவச்செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் நான் எழுதிய கவிதையை இங்கே பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன்.

**நான் பறந்து கொண்டேயிருப்பேன்**

நான் பிறந்தேன் அரும்பெரும் சக்தியுடன்
நான் பிறந்தேன் நற்பண்புகளுடன்
நான் பிறந்தேன் கனவுடன், வளர்ந்தேன் நல்ல எண்ணங்களுடன்
நான் பிறந்தேன் உயர் எண்ணங்களை செயல்படுத்த
நான் பிறந்தேன் ஆராயச்சி உள்ளத்துடன்
நான் பிறந்தேன் ஆகாய உச்சியில் பறக்க
நான் பூமியில் ஒரு போதும் தவழமாட்டேன்,
தவழவே மாட்டேன், ஆகாய உச்சிதான் என் லட்சியம்,
பறப்பேன், பறப்பேன், வாழ்வில் பறந்து கொண்டே இருப்பேன்.

பறக்கவேண்டும் என்ற உணர்வு வாழ்வில் பெரிய லட்சியத்தை அடைய வழிவகுக்கும். அந்த லட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டும். நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை, உன்னால் வெற்றியடைய முடியும்.

***நீ யாராயிருந்தாலும் உழைப்பால், அறிவால் வெற்றியடைவாய்***

பினாச்சியோ என்ற கவிஞர் சொல்கிறார்.

நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை,
நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும்
உன் உழைப்பால், நீ எண்ணியது உன்னை வந்து சேரும்

என்னுடைய கருத்து என்னவென்றால், உன் உள்ளத்தில் லட்சிய ஒளி பிரகாசிக்கட்டும், இலட்சியத்தை அடைய அறிவாற்றலை பெருக்கு, அதை அடைய உழைப்பு முக்கியம், உழை, உழைத்துக்கொண்டே இரு. இத்துடன் விடாமுயற்சி உனக்கிருந்தால் நீ யாராக இருந்தாலும் வெற்றி உன்னை வந்து சேரும்.

இத்தருணத்தில் விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக, என் வாழ்வில் அச்சாணியாக திகழ்ந்த திருக்குறளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படா தவர்**

அதாவது, தோல்வி மனப்பான்மைக்கு தோல்வி கொடுத்து வெற்றியடைய வேண்டும் என்பது தான் இந்த திருக்குறளின் மூலக்கருத்து ஆகும். எனவே நண்பர்களே.

கடந்த 12 ஆண்டுகளில், இதுவரை நான் 1.2 கோடி இளைஞர்களை சந்தித்து கலந்துரையாடியிருக்கிறேன், அவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு இருக்கிறேன், அவர்களின் கனவுகளை அறிந்து வைத்திருக்கிறேன் சமீபத்தில் இந்தியாவில் மகாராஷ்ட்ராவில் உள்ள அமராவதியில் கிட்டத்தட்ட 1 லட்சம்

இளஞர்கள் கூடிய கூட்டத்தில் எத்தனை பேர் **Engineer**, **Doctor** எத்தனை பேர்**, IAS/IPS Officer** எத்தனை பேர்**, Teacher** எத்தனை பேர்**,** எத்தனை பேர் **Entrepreneur** ஆக போகிறீர்கள் என்று கேட்டேன், சில 100 இளைஞர்கள் கையை தூக்கினார்கள். எத்தனை பேர் சந்திரனுக்கும், வியாழன் கிரகத்திற்கும், போக விரும்புகிறீர்களா என்று கேட்டேன், அனைவரும் கையை தூக்கினார்கள். எத்தனை பேர் நல்ல அரசியல் தலைவர்களாக விரும்புகிறீர்கள் என்று கேட்டேன். 50 இளைஞர்கள் நாங்கள் நல்ல அரசியல் தலைவர்களாக விரும்புகிறோம் என்றார்கள். அதில் 5 பேரை தேர்ந்தெடுத்து, அவர்களிடம் நீங்கள் அரசியல் தலைவரானால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். ஒரு மாணவன் இந்தியாவை 10 ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியாவாக மாற்றுவேன் என்று சொன்னான், ஒரு மாணவி சொன்னாள், லஞ்சத்தை ஒழிப்பேன் என்று, இன்னொரு மாணவன் – இளைய சமுதாயத்தை என்னால் முடியும் என்ற நம்பிக்கையை கொடுத்து, நம்மால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்ப்பேன், அப்படியென்றால் இந்தியாவால் முடியும் என்ற சூழ்நிலையை உருவாக்குவேன் என்று நம்பிக்கையை கொடுப்பேன் என்று கூறினான்.

அதைப்போல் இங்கு யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் இளைஞர்கள் அனைவரும் இலங்கையை ஒரு வளர்ந்த நாடாக மாறுவதற்கு நீங்கள் தேர்ந்தெடுத்து பணியாற்றும் துறையில் சிறப்பாக பணியாற்றி சிறந்து விளங்குவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நண்பர்களே, நான் எந்த நாட்டிற்கு சென்றாலும் அந்த நாட்டின் இளைஞர்களிடம் இந்த நம்பிக்கையை, லட்சியத்தை, கனவைப்பார்கிறேன். அப்படிப்பட்ட இலட்சியம், கனவு உங்கள் கண்களில் பிரகாசிப்பதைப்பார்க்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

***நீ தனித்துவமானவன்.***

தினமும் வீட்டில் எரியும் மின்சார பல்பை பார்த்தவுடன் நம் நினைவுக்கு வருகிறார் தாமஸ் ஆல்வா எடிசன், தினமும் ஆகாயத்தில் சத்தத்தை எழுப்பி விண்ணில் பாயும் ஆகாய விமானங்களை பார்த்தவுடன் நம் மனதில் வருகிறார்கள் ரைட் சகோதரர்கள், நாம்

உபயோகிக்கும் தொலைபேசி மற்றும் கைபேசியை பார்க்கும் போது அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் நம் மனதின் அருகாமையில் தோன்றுகிறார், சூரியன் பிரகாசித்துக்கொண்டு இருக்கும் போது ஏன் கடலின் நிறமும், அடிவானமும் நீல நிறத்தில் தோன்றுகிறது. என்ற கேள்வி எல்லோருக்கும் வரவில்லை, ஆனால் லண்டனில் இருந்து கொல்கத்தாவிற்கு பயணம் செய்யும் போது ஒரு விஞ்ஞானிக்கு அந்த கேள்வி வந்தது, அந்த கேள்விக்கான பதில்தான் ஒளிச்சிதறல் **(Scattering of Light)**, அது தான் சர்.சி.வி. ராமனுக்கு ராமன் விளைவிற்கான **(Raman Effect)** நோபல் பரிசை பெற்று தந்தது.

உலக சமுதாயத்தில் அகிம்சா தர்மத்திற்கு ஆதி கர்த்தாவாக திகழ்ந்தவர் யார் என்ற கேள்வி வரும் போது நாம் எல்லோருக்கும், இந்தியாவில் இருந்தாலும், இலங்கையில் இருந்தாலும், நம் ஞாபகத்திற்கு வருவது, பல்லாயிரக்கணக்கான வீரர்களை, மக்களை கொன்று குவித்து, இரத்த சகதியில் வீழ்த்தி, கலிங்க போரில் வெற்றி அடைந்த அசோகரது மனமாற்றமாகும். அதன் பயனால் விளைந்தது தான் அகிம்சா தர்மாகும். அவர் புத்த மதத்தை தழுவி, புத்த மதத்தை உலகமெல்லாம் பரப்பியது, அகிம்சையை உலகுக்கு உணர்த்தியது ஒரு உன்னதமான நிகழ்ச்சியாகும். அசோக சக்ரவர்த்தியின் மகன் அர்கத் மகிந்தா, கி.மு 3வது நூற்றாண்டில் புத்த மத்தத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார் என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக குறிப்பிடப்படுகிறது. இந்தியாவீல் தோன்றிய அகிம்சா தர்மம், இலங்கையிலும் தோன்றியது. இந்த அகிம்சா தர்மத்தை பயன்படுத்தித்தான் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்று, உலகிற்கே அகிம்சா தர்மத்தை போதித்தவர் மகாத்தமா காந்தியடிகள்.

இப்படி பட்ட வரலாற்றின் பக்கங்களை, தனது பக்கங்கலாக மாற்றிய ஒவ்வொருவரும் ஒருவகையில் தனித்தன்மை பெற்றவர்கள் தான். இந்த உலகத்தில் பிறந்த அனவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் அந்த பக்கத்தை இந்த உலகமே படிக்க வைப்பது இளைஞர்களாகிய உங்கள் ஒவ்வொருவரதும் கைகளில், சிந்தனைகளில், செயல்களில் தான் உள்ளது.

நீங்கள் அனைவரும் தனித்துவமானவர்களே! ஆனால் இந்த உலகம் இரவும் பகலும் கடுமையாக உழைத்துக்கொண்டு இருக்கிறது, ஏனென்று தெரியுமா, உங்களையும் மற்றவர்களைப்போல் ஆக்குவதற்காக. அந்த மாய வலையில் நான் விழமாட்டேன், நான் தனித்துவமானவன் என்பதை நிரூபிப்பேன் என்று நீங்கள் நினைத்த அடுத்த வினாடி வரலாற்றில் உங்கள் பக்கம் எழுதப்பட நீங்கள் விதை விதைத்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

மன எழுச்சியடைந்துள்ள இளைஞர்கள், ஒரு நாட்டின் மிகப்பெரிய சொத்து, நாட்டின் சவால்களை சமாளிக்க, நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட நமது இளைய தலைமுறை எழச்சியுறவேண்டும். கல்வி நிறுவனங்கள் மாணவ மாணவியரின் ஆராயும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால் அது மாணவர்களின் படைப்புத்திறனையும் ஆக்கப்பூர்வமான உற்பத்தி திறனையும் வளர்க்கும். இந்தத் திறமை பெற்ற மாணவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தன்னிச்சையாகவே கற்கும் திறனை அடைவர்.

ஆனால் நாட்டில் பெரும் சதவிகிதம் பேர் படிப்பின் பல்வேறு நிலைகளில் கல்வி கற்க இயலாத சூழ்நிலையில் மற்ற வேலைகளுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலைகளுக்கு ஆளாகின்றனர். நாட்டில் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு கவனச்சிதறல்கள், வறுமை, படிப்பிற்கேற்ற வேலை, வேலைக்கேற்ற படிப்பும், சிறப்பு பயிற்சியும் இல்லாத சூழல், உலகமயமாக்களினால் ஏற்படும் சமூக பொருளாதர ஏற்றத்தாழ்வு, வேற்றுமை, மாறிவரும் குடும்பச்சூழல், மாற்று கலாச்சார மாற்றம் நம் இளைஞர்களை வேகமாக மாற்றும் சூழல் இன்றைக்கு நாட்டில் நிலவுகிறது.

இத்தனையும் தாண்டி நமது நாடு, நமது பாரம்பரியம், நமது நாட்டின் வளம், நமது நாட்டிற்கேற்ற வளர்ச்சி முறை, நாம் அனைவரும் ஒரே நாட்டை சேர்ந்தவர்கள் என்ற ஓற்றுமை உணர்வு, முன்னோர்களின் நமக்கு விட்டுச்சென்ற பழக்க வழக்கங்கள் இவைகளை அடிப்படையாக கொண்டு, இந்தக்கால முறைக்கு ஏற்றாற் போல் நம்மை நாம் அறிவுப்பூர்வமாக மாற்றி அமைக்கவேண்டும். நாம்

நமது முகவரியை இழக்காமல் நமது மக்களை அறிவார்ந்த சமுதாய மாறுமலர்ச்சிக்கு அழைத்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

**புயலைத் தாண்டினால் தென்றல்**

அன்புள்ள மாணவர்களே, திருக்குறள் என் வாழ்வில் இணைந்த மிக முக்கிய வாழ்க்கைச் சித்தாந்தம். என் மாணவப் பருவத்தில் நான் அறிந்த திருக்குறள், என்னுடைய வாழ்வில் முக்கிய அங்கமாகி, என் மனதில் லட்சியப் பொறிகளை உருவாக்கியது.

1946ல் ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது என்னுடைய தமிழ் ஆசிரியர் திருமைலைக்கண்ணன், வினைத்திட்பம் 67வது அதிகாரத்திலிருந்து 666வது திருக்குறளைப் பாடிப்பாடி பரவசப்படுத்தினார். அன்று மனதில் பதிந்த குறள், என் வாழ்வில் லட்சியங்களைக் கொண்டு வரும் விண்கலம் போன்றதோர் சக்தி மிக்க குறளானது.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

இக்குறள்தான் என் வாழ்வின் அஸ்திவாரமானது. எனது விஞ்ஞானப் பணியில் ஒவ்வொரு கால கட்டத்திலும் சோதனைகள் சோர்வுறச் செய்த போது, உள்ளத்துக்கு உரமூட்டிய குறள் இது. இந்தியாவில் பல விஞ்ஞானிகளின் எண்ணங்கள் பல வடிவங்களில் உருவெடுத்து அக்னி எழுச்சி பெற்று, ஏவுகணைச் சக்தியாக மலர்ந்தது, இந்தியா பல துறைகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது. செயலில் உறுதி இருந்தால், வெற்றி நிச்சயம்.

ஒரு முறை நான் படித்த திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு சென்று இருந்தேன். அப்போது ஒரு மாணவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். நம் நாடு ஜனநாயக நாடு, அப்படிப்பட்ட நாட்டில் பல நன்மை, தீமைகள் நடக்கின்றன, வன்முறைகள், கலவரங்கள், நில அபகரிப்புகள், ஜாதி மத மோதல்கள், தீவிரவாதம், அடக்குமுறை,

பழிவாங்குதல், ஏதேச்சிகாரம், சர்வாதிகாரம், வல்லவன் வகுத்ததுதான் வழி, பலமுள்ளவன் தான் பிழைக்கமுடியும் என்பது போன்ற நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக இந்த ஜனநாயக நாட்டிலே நடக்கிறதே, அப்படி நடந்தால் கூட செய்தித்தாளிலும், தொலைக்காட்சியிலும் உங்களைப்பார்க்கும் போதெல்லாம் எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே. வாழ்க்கை எப்போதும் இனிப்பாக இருக்க முடியுமா? என்று கேட்டார்.

நான் அவருக்கு பதில் சொன்னேன். **"ஒவ்வொருவரின் வாழ்விலும், பல புயல்களையும், சில தென்றல்களையுமே எதிர் கொள்ள நேர்கிறது. ஒரு தென்றலின் சுகத்தை நோக்கிச் செல்லும் போது, பல புயல்களைக் கடக்க வேண்டியருக்கிறது. தோல்வியில்லாமல் வெற்றியில்லை. கண்ணீர் எப்போதும் கரிப்பாகவே இருக்கும். ஆனாலும் ஒரிரு சமயங்களில் அது இன்பமாகவும் இருக்கும். அந்த இன்பம் பெற வேண்டுமானால், பல புயல்களைக் கடக்கும் உள்ள உறுதியைப் பெற வேண்டும். நம் எண்ணங்கள் உறுதியானால், அவை உழைப்பாக மாறி, நாம் எண்ணிய இலட்சியத்தை அடையலாம்".** இக்கருத்தை பலவிதங்களில், தெளிவு உரைகளில் மறைநூல் திருக்குறள் உணர்த்துவதை காணலாம். 1947ல் இந்தியாவில் ஒரு இடத்தில் ஜாதி கலவரமோ, மதக்கலவரமோ, ஏற்பட்டால் அது நாடு முழுமைக்கும் பரவும் தன்மை படைத்தாக இருந்தது. ஆனால் 2012ல் அப்படி இல்லை, இந்திய சமுதாயம் அறிவார்ந்த மாற்றத்தை அடைந்ததின் காரணமாக, சமுதாயம் மறுமலர்ச்சி பெற்றதின் காரணமாக, அப்படிப்பட்ட வன்முறைகள், கலவரங்கள் மறைந்து வருகிறது. அறிவுப்புரட்ச்சி ஒன்று தான் சமுதாய மறுமலர்ச்சிக்கான அடிப்படையாகும். ஜாதி, மதம், மொழி மற்றும் இன வேற்றுமைகளில் இருந்து விடுபட்டு மனித இனம், மேம்பாடடைந்த, அறிவார்ந்த மனித இனம் என்ற நிலைக்கு மனித சமுதாயத்தை எடுத்து சென்றால் தான், ஒரு சமதர்ம சமுதாயத்தை,

மேடு பள்ளம் இல்லாத சமுதாயத்தை, வளர்ந்த சமுதாயத்தை, அமைதியான சமுதாயத்தை அமைக்க முடியும். அப்படிப்பட்ட சமுதாயம் அமைய வேண்டுமானால், அடிப்படைத் தேவை என்ன, நம் வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சியம் இருக்கவேண்டும். இலட்சியம் மட்டும் போதாது, அதை அடைக்கூடிய அறிவையும், ஆற்றலையும், விவேகத்தையும் பெறவேண்டும். எனவே நண்பர்களே, அதைப்பற்றி உங்களுடன் கலந்துறையாடுகிறேன்.

**இலட்சிய தாகம்**

இந்த சமயத்தில் நான் ஒரு முறை இந்திய பாராளுமன்றத்தில் இயற்றி பாடிய கவிதை வரிகள் என் நினைவுக்கு வருகிறது. அந்தக் கவிதையின் தலைப்பு இலட்சியம்.

***<u>இலட்சியம்</u>***

நான் ஏறிக்கொண்டே இருக்கிறேன்,
எங்கிருக்கிறது இலட்சிய சிகரம், என் இறைவா

நான் தோண்டிக்கொண்டே இருக்கிறேன்,
எங்கிருக்கிறது அறிவுப் புதையல் என் இறைவா

நான் பெருங்கடலில் நீந்திக் கொண்டே இருக்கிறேன்.
எங்கிருக்கிறது அமைதித் தீவு. என் இறைவா

இறைவா, இறைவா, நூறு கோடி மக்கள் இலட்சிய சிகரத்தையும், அறிவுப்புதையலையும், இன்ப அமைதியையும் உழைத்தடைய அருள்வாயாக.

இந்தக் கவிதையின் கருத்து என்ன.

நாம் வாழ் நாள் முழுவதும் படித்துக் கொண்டிருக்கிறோம். பணி செய்து கொண்டிருக்கிறோம். இவைகளைச் செய்யும் போது நமக்கு வாழ்வில் ஒரு இலட்சியம் வேண்டும். அதாவது, நமது எண்ணம் உயர்வாக

இருந்தால், அரும் பெரும் இலட்சியங்கள் தோன்றும், பெரும் இலட்சியம் இருந்தால் அருமையான எண்ணம் வரும். எண்ணம் உயர்ந்தால் நம் பணிகள் எல்லாம் உயர்ந்ததாக இருக்கும்.

### வள்ளுவர் காட்டும் வளமான நாடு

திருவள்ளுவரின் குறள் நமக்கு ஒன்றை நினைவு ஊட்டுகிறது அதாவது.

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து**

ஒரு நாடு நல்ல வளமான நாடாக கருதப்படவேண்டுமானால் அந்த நாட்டில் நோயின்மை, செல்வச்செழிப்பு, நல்ல விளைச்சல், அமைதியும் சுமுகமான சமுதாயச் சூழ்நிலையும், வலிமையான பாதுகாப்பும் அந்நாட்டில் நிலவவேண்டும் என்கிறார். என்ன அருமையாக ஒரு வளமான நாட்டை படம் பிடித்துக் காட்டுகிறார். நாம் எல்லோரும் அறிவார்ந்த முறையில் உழைத்துத்தான் நமது நாட்டை வளமான நாடாக மாற்ற வேண்டும்.

### அமைதியை தேடி

சுமூகமான, மேடு பள்ளம் இல்லாத ஒரு அறிவார்ந்த, அமைதியான, மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்க என்ன செய்ய வேண்டும் என்ற தேடலின் ஒரு பகுதியாக தேடிக்கொண்டு இருக்கிறேன். நான் ஒரு முறை 2003 ஆம் ஆண்டு இந்தியவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்திற்கு 3500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள தவாங் என்ற இடத்திற்கு சென்றேன். ஒரு நாள் முழுதும் இருந்து அங்கு புத்த பிட்சுகளை சந்தித்தேன். கடுமையான குளிரில், வாழ்வதற்கு மிகவும் சிரமப்படக்கூடிய சூழல் இருக்கும் போது அங்கு உள்ள மக்கள் அனைவரும் சிரித்த முகத்துடன் புன்னகை தவழ வீற்றிருப்பது கண்டேன். இப்படி பட்ட சூழ்நிலையில் இங்கு எப்படி அமைதியும். சாந்தியும் நிலவுகிறது என்ற கேள்வி

என்னுள் எழுந்த்து.

அங்கிருக்கும் தலைமை புத்த பிட்சுவிடம் கேட்டேன்? இது எப்படி சாத்தியமாகும் என்று? அதற்கு அவர் நீங்கள் நாட்டின் குடியரசுத்தலைவர் உங்களுக்கு தெரியாதா என்றார். நான் விடவில்லை, இல்லை நீங்கள் எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தினேன். அதற்கு அவர் சொன்னார். இந்த உலகத்தில், நமக்கு பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கையின்மை, சுயநலம், சமூக பொருளாதார வேறுபாடு, கோபம், வெறுப்பு அதன் மூலமாக வன்முறை. இப்படி பட்ட சூழ்நிலையில், புத்த தவஸ்தலம் என்ன செய்தியை பரப்புகிறது என்றால், நாம் ஓவ்வொருவரும் ***"நான், எனது"*** என்ற எண்ணத்தை நம் மனதில் இருந்து அகற்றினால், நம்மிடம் உள்ள தற்பெறுமை மறையும்., தற்பெறுமை மறைந்தால், மனிதர்களுக்கு இடையேயான வெறுப்பு அகலும், வெறுப்பு நம் மனதை விட்டு அகன்றால், வன்முறை எண்ணங்கள் நம்மை விட்டு அகலும், வன்முறை எண்ணங்கள் நம்மை விட்டு மறைந்தால், அமைதி நம் மனத்தை தழுவும்.

என்ன ஒரு அருமையான விளக்கம், ஆனால் எப்படி ***"நான், எனது"*** என்ற எண்ணத்தை நம் மனதில் இருந்து அகற்ற முடியும். எவ்வளவு கஷ்டமான விஷயம். இதற்கான பக்குவமான கல்வி முறையை எப்படி நாம் கொண்டு வருவது என்பது தான் நம்மிடையே உள்ள சவால். அந்த சவாலை எப்படி சமாளிப்பது, அமைதியை எப்படி அடைவது என்ற என் கேள்விக்கு விடை தேடிய என் பயணம் தொடர்ந்தது. நான் பல்கேரிய நாட்டிற்கு சென்றேன் அங்கு கிருஸ்தவ தவஸ்தலத்திற்கு சென்றேன். தாவங்கில் கிடைத்த செய்தியின் தொடர்ச்சியாக, அங்கு உள்ள முதிர்ந்த பாதிரியார் ஒரு வாக்கியத்தை தந்தார். **மன்னிப்பு** என்ற உன்னதமான வாக்கியத்தை தந்தார். மன்னிப்பு என்பது எப்படி ஒரு வாழ்க்கையை பக்குவப்படுத்தும் என்பதை பற்றிய அருமையான விளக்கம் பெற்றேன்.

அதன் தொடர்ச்சியாக விவேகானந்தரது பிறந்த இடத்திற்கு சென்றேன். எனக்கு கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொண்ட போது அங்கு எனக்கு கிடைத்த பதில் என்னவென்றால். **கொடை, அதாவது கொடுக்கும் குணம்,** இத்தனை குணங்களுடன் கொடையும் சேர்ந்து இருந்தால் நாட்டில் அமைதிக்கு அது வித்திடும் என்பதாகும். இந்த தகவலோடு அஜ்மீர் ஸரீப் சென்றேன், அங்கு சென்று வெள்ளிக்கிழமை தொழுகைக்கு சென்றேன். அங்கு இருந்த சுபி பெரியவரிடம் இதே கேள்வியை கேட்டேன், அதற்கு அவர் **ஆண்டவனின் படைப்பில் தேவதையும் உண்டு, சைத்தானும் உண்டு, நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களுக்கு வித்திடும், நல்ல செயல்கள் அன்பை வளர்க்கும், அன்பு அமைதிக்கு வித்திடும்** என்றார். நல்ல செயல்களைப் பற்றி எண்ணும் பொழுது. காந்திஜி வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்கள் எல்லோரிடமும் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காந்திஜியின் 9 வது வயதில் அவரது தாயார். அவருக்கு ஒரு அறிவுரையை தந்தார் அந்த அறிவுரையாவது.

> ***மகனே, உனது வாழ்வில், துன்பத்தில் துவளும், யாராவது ஒருவரின் வாழ்வில் நீ ஏதேனும் ஒரு மாற்றத்தை உருவாக்கி, அவரை துன்பத்தில் இருந்து மீட்டெடுத்து முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றால், நீ மனிதனாக பிறந்ததின் பலன் உன்னை முற்றிலும் வந்தடையும். கடவுள் எப்பொழுதும் உனக்கு அருள் செய்வார்.***

இந்த அறிவுரை, இந்த பூமியில் பிறந்த எல்லா மக்களும் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான அறிவுரை.

***<u>மனசாட்சியின் மாட்சி</u>***

சமீபத்தில் சுவாமி சமர்பண் எழுதிய “Tiya: A Parrot’s Journey Home” என்ற புத்தகத்தை படித்தேன். சில புத்தகங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை, எனக்கு மிகவும் நெருக்கமானவை. அந்த புத்தகங்கள் எனது தனிப்பட்ட நூலகத்தை அலங்கரிக்கும். அப்படி ஒரு புத்தக்ம்

தான் இந்த புத்தகம். தியா என்ற இந்த புத்தகம் மனசாட்சியை பற்றியதாக இருப்பதால் நாம் ஓவ்வொருவரையும் தொடுகிறது. இதை மிக அழகாக எழுதியிருக்கிறார் சுவாமி சமர்பண். எப்படி நல் மனசாட்சி கொண்ட ஓரு அருமையான பச்சைக்கிளியின் வாழ்வு தியாவின் வாழ்க்கையை மாற்றியது என்பதுதான்.

கோபம் விவேகத்திற்கு அழகல்ல. இதை பச்சைக்கிளி மட்டும் உணர்ந்து கொள்ளவில்லை, ஆனால் இந்த புத்தகத்தை படிக்கும் ஓவ்வொரு வாசகரும் உணர்வார்கள். என்னை கவர்ந்த ஓரு முக்கியமான செய்தி என்னவென்றால்,

***“நீ தனித்துவமானவன் என்பதை நீ உணரவேண்டும்.***
***உன்னை பற்றி நீ உணர்ந்ததை காட்டிலும் நீ மேலானவன் என்பதை உணர்***
***உன்னை பற்றி நீ அறிந்த அடுத்த வினாடி, உனது செயல்***
***நீ எண்ணியதை காட்டிலும் மேலாக சாதிக்க வைக்கும்”.***

எப்படி நாம் நமது மனசாட்சியை பக்குவப்படுத்துவது. என்று என்னை நானே கேட்டேன். மனசாட்சி நம்மை நல்வழிக்கும் இட்டுச்செல்லும், இல்லை என்றால் அது விரும்பிய வழிக்கும் இட்டுச்செல்லும். கிளிக்கு கிடைத்த அருமையான செய்தி என்ன.

***“அற்ப காரண, காரியங்களுக்கு கண்ணீர் விட்டு பொழுதை கழிப்பதைக்காட்டிலும், வாழ்க்கையில் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் அதிகம். இப்படி பட்ட இடத்தை விட்டு வெளியேறு சீக்கிரம்.”***

என்ன ஓரு அருமையான செய்தி. எண்ணம் பெரிதாக இருந்தால் நம்மால் சாதிக்க முடிவது அதிகம். இதைப்படிக்கும் போது எனக்கு திருவள்ளுவர் சொன்ன திருக்குறள் நினைவுக்கு வருகிறது

.

***உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது***
***தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.***

அதாவது, நமது எண்ணம் உயர்வாக இருந்தால், அரும் பெரும் இலட்சியங்கள் தோன்றும், பெரும் இலட்சியம் இருந்தால் அதுவே நம்மை உயர்த்தும், ஓரு வேளை நமது முயற்சியில் தோல்வி ஏற்பட்டால் கூட என்பது கருத்து.

தியாவில் ஓரு வாக்கியம் என்னை மிகவும் கவர்ந்தது

***"நாமெல்லாம் இன்றைய வாழ்க்கையை மட்டும் வாழ பழகிக்கொண்டோம், அதனால் தானோ என்னவோ பழைய சிறப்பான வாழ்க்கை முறையை மறந்தோம் அதுமட்டுமல்ல எதிர்காலத்தை பற்றியும் சிந்திக்க மறந்தோம்."***

சுவாமி சமர்பண் அவர்களின் இந்த தத்துவம் எனக்கு மிகவும் பிடித்தது, அதுமட்டுமல்ல எனது இளைய நண்பர்களுக்கு மிகவும் வேண்டிய தத்துவமாகும். பனிப்பறவைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள், அது என்ன ஓரு அருமையான செய்தியை மனித சமுதாயத்திற்கு கொடுக்கிறது. அது தான் தைரியம். அந்த செய்தி சொல்வது என்ன

***"பயங்கரம் – என்ன அப்படி ஓரு பயங்கரமான ஆபத்து"***
***பயம் கோழைக்கு ஓரு சாக்கு***
***தைரியம் வீரனுக்கு அலங்காரம்"***

வாழ்க்கைப்பயணம் ஓரு அனுபவம். அறிவார்ந்த மனது வாழ்க்கையின் ஓவ்வொரு படிப்பினையில் இருந்தும் கற்றுக்கொள்கிறது. கிளியின் அனுபவம் வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குகிறது. அனுபவம் அறிவைக்கொடுக்கிறது, அறிவுதான் நம்மை பலப்படுத்துகிறது. பலம் தான் அமைதியின் பாதை, நான் அமைதியின் பாதையில் நடக்கிறேன். மலை உச்சிக்கு ஏறும் பொழுது, மேடும் உண்டு, பள்ளமும் உண்டு. என்றால் நாம் தொடர்ந்து முன்னேறுவதுதான் முக்கியம், மேடும், பள்ளமும் வாழ்க்கையில் முக்கியமில்லை.

மற்றொரு முக்கியமான செய்தி என்னவென்றால்,

***"எதில் நீ உன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறாயோ,***
***அதில் நீ பதில் அளிக்க கடமைப்பட்டு இருக்கிறாய்***
***அதனால் விளையும் இன்பமும், துன்பமும் உன்னைச்சார்ந்தது***

***அது உன்னை மேலும் சிக்கலுக்குல் தள்ளும்***

***எதைப்பற்றியும் பற்றற்று இரு***
***பற்று உன்னை பலியாக்கும்***
***பற்றில்லாமை உன்னை விடுதலையாக்கும்”***

இறுதியாக தியா மனசாட்சியை பற்றி உணர்கிறார்.

***“மனசாட்சி யார் என்று தெரியவில்லை,***
***ஆனால் மனசாட்சி இன்றி நான் இல்லை என்று தெரிகிறது.***
***என் வாழ்விலும், முடிவிலும், வெற்றியிலும், தோல்வியிலும்***
***சந்தோஷசத்திலும், துக்கத்திலும்***
***மனசாட்சி என்னுடன் தொடர்ந்து வருகிறது”.***

கிளி கடைசியாக எல்லையில்லா நித்தியத்தை நோக்கி பயணப்பட்டு மறைகிறது.

இந்த புத்தகம் எதைப் பற்றி பாடுகிறது

***“வாழ்வின் கசப்பான மற்றும் இனிப்பான அனுபவங்களுக்கும்,***
***வாழ்வின் சந்தோஷத்திற்கும், துக்கத்திற்கும்,***
***வாழ்வின் சிரிப்பிற்கும், கண்ணீருக்கும்,***
***வாழ்வின் இன்பத்திற்கும், வலிக்கும் துன்பத்திற்கும்,***
***கடலின் பேரலைகள் எப்படி கடலின் ஆழத்தை கண்டதில்லையோ***
***அதைப்போல் இவை எல்லாவற்றிற்கும்***
***நாம், நாம் மட்டுமே, காரணம்”***

சுவாமி சமர்பண் எழுதிய “Tiya : A Parrot’s Journey Home” என் மனதை மகிழப்படுத்தியது, மனசாட்சியின் மனதை பற்றி அறிந்து கொள்ள உதவியது.

**முடிவுரை**

மனசாட்சி என்பது, இதயத்தின் ஆத்மா, மனித இதயத்தில் இருந்து சுடர் விட்டு வழிகாட்டும் ஒரு பேரொளி. வாழ்க்கை எப்படி உண்மையோ அதைப்போன்றது அது. நேர்மைக்கு புறம்பாக

சிந்தித்தாலோ, நடந்தாலோ அது தன் எதிர்ப்பைக்காட்டும். மனசாட்சி என்பது நமது பாரம்பரியத்தில் வந்துதித்த ஓன்று, தப்பையும், சரியான வற்றையும் நமக்கு சரியான நேரத்தில் உணர்த்தும் ஓரு அறிவார்ந்த மரபணு உண்மை. நமது குற்றங்களை பதிவு பண்ணும் ஓரு வாழ்க்கை புத்தகம். சார்பற்ற சாட்சியாக மனசாட்சி விளங்குகிறது. அது நம்மை பயமுறுத்தும், நம்பிக்கையை கொடுக்கும், பாராட்டும், தண்டனை அளிக்கும், நம்மை கட்டுக்குள் வைக்கும். ஓரு தடவை மனசாட்சி உறுத்தினால் அது எச்சரிக்கை, மறுமுறை உறுத்தினால் தண்டனை. கோழை கேட்பான், இது பாதுகாப்பானதா, பேராசாக்காரன் கேட்பான் – இதனால் எனக்கு என்ன லாபம் என்று, தற்பெறுமைக்காரன் கேட்பான், நான் மகானாக முடியுமா என்று, இச்சையானவன் கேட்பான், அதில் என்ன சந்தோஷம் உண்டு என்று, ஆனால் மனசாட்சி ஓன்று தான் கேட்கும், அது சரியா என்று, ஆனால் ஓட்டு மொத்தமான பதில் என்ன – தன் மனசாட்சி படி நேர்மையாக நடப்பது ஓன்று தான்.

இதில் இருந்து என்ன விளங்குகிறது என்றால், சிறு வயதில். இளம் மனதில் விதைக்கும் விதை எப்படி பட்ட பலனை தருகிறது என்பதற்கு நம்மில் அனேக உதாரணங்கள் உள்ளது. எனவே தான் நாம் இளைஞர்களை பக்குவப்படுத்தி தயார் பண்ணினால் தான் நமது இலட்சியமான, வளமான நாட்டை, உங்களால் வளமான இலங்கையை அடுத்த 15 ஆண்டுகளுக்குள் மாற்ற முடியும்.

எனவே, மாணவர்களே! உறக்கத்திலே வருவதல்ல கனவு, உன்னை உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு. எனவே கனவு காண்பது என்பது ஓவ்வொரு குழந்தையின், இளைஞர்களின் வாழ்க்கையின் ஓரு முக்கியமான விஷயம். ஓவ்வொரு இளைஞர்களுக்கும் வாழ்வில் ஓரு இலட்சியம் வேண்டும், அந்த இலட்சியம் நிறைவேற கடுமையாக உழைக்கவேண்டும், தொடர்ந்து அறிவைப்பெற, அதை தேடி சென்றடையவேண்டும், விடா முயற்சி வேண்டும், அதாவது தோல்வி மனப்பான்மையை தோல்வியடையச்

செய்ய வேண்டும். இந்த நான்கு குணங்களும் இருந்தால் கனவு நனவாகும்.

நீங்கள் எல்லாம் வெற்றியடைவீர்கள். யாழ்பாணப் பல்கலைகழகத்தில் பயிலும் மாணவர்களே உங்களுக்கும், உங்களது எதிர்கால இலட்சியத்திற்கும், உங்கள் நாட்டிற்கும் எனது நல் வாழ்த்துக்கள்.